04.06.2026

O.S.N0.86/2020,

D.W. 1. திரு.நெல்லைகுமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

பி.வா.சா.ஆ.10 உயிலை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் எனது அம்மா தாக்கல் செய்த வழக்கிற்கு பின்னர் நான் படித்து பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.10 சம்மந்தமான அசல் உயிலானது எனக்கு எப்போது கிடைத்தது என்றால் எனது அம்மா தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பிற்கு பின்னர் எனது கைக்கு கிடைத்தது. மேற்படி அசல் உயிலை வைத்து நான் பட்டா மாற்றவதற்கும், சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. போலிசாரிடம் தான் மேற்படி அசல் உயிலை கொடுத்தேன். மேற்படி அசல் உயில் மோசடி உயில் என்று சொல்லி என்னை குற்றவாளியாக குறிப்பிட்டு திருநெல்வேலி நீதித்துறை நடுவர் எண். 1, நீதிமன்றத்தில் Cr.No.56/2020 ன் C.C.No.1135/2022 என்ற வழக்கில் 17.06.2026ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்றவியல் வழக்கை வழக்கறிஞர் திரு.பிரபாகர் தான் நடத்திவருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் வழக்கறிஞர் திரு.பிரபாகர் மூலமாக தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.10 உயில் ஆவணம் இல்லை என்றால் சொத்துக்கள் அனைத்திலும், எனது சகோதர, சகோதரிகளுக்கு சம பாகம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் எனது அம்மா, அப்பாவும் என்னிடம் சொத்தை கொடுத்துவிட்டதால் அதை நான் மட்டும் அனுபவித்து வருகிறேன். என்னுடைய எதிர்வழக்குரையில்

சொத்து எவ்வாறு எனக்கு உரிமை உள்ளது என்று கட்சி செய்கிறேன் என்றால் என்அனுபவித்தின் மூலமாகவும், உயில் மூலமாகவும் உரிமை கோருகிறேன். நான் முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது உயில் மூலமாக தான் உரிமை உள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அப்போது நான் மனஅழுத்ததில் இருந்ததால் அவ்வாறு சொல்லியிருக்கிறேன். பி.வா.சா.ஆ.16 ல் எனது குடியிருப்பு கதவு எண். 1, ஐ.சி.எல் காலனி, தாராபுரம் என்பது எனது புதிய குடியிருப்பு விலாசமாகும். நான் நிரந்தரமாக மேற்படி குடியிருப்பில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும், நான் கதவு எண். 7, சுந்தராபுரம், கரையிருப்பு என்ற முகவரியில் குடியிருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கதவு எண். 7, சுந்தராபுரம், கரையிருப்பு என்ற முகவரியில் குடியிருந்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் நான் கொடுக்க தயாராக உள்ளேன். கதவு எண். 7, சுந்தராபுரம், கரையிருப்பு என்ற முகவரியின் தீர்வை ரசீது, மின்கட்டண ரசீது ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் நான் கொடுக்க தயாராக உள்ளேன்.கதவு எண். 7, சுந்தராபுரம், கரையிருப்பு என்ற முகவரியில் வைத்து தான் எனது பழைய வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ல் பதிவு செய்யப்பட்ட உயில் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏதாவது விளக்கம் உள்ளதா என்றால் இல்லை. என்னால் சொல்லப்படும் உயில் பதிவு செய்யப்படாத உயில். அந்த உயிலை என் அம்மா நீதிமன்றத்தில் போட்டு நீதிமன்றத்தில் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். நீதிமன்றத்தில் அந்த பதிவுசெய்யப்படாத உயிலை வாங்கி நான் வங்கியில் கொடுத்து பின்பு வங்கியில் இருந்து வாங்கி தான் போலிசாரிடம்

கொடுக்கப்பட்டது. நான் சொல்லக்கூடிய உயில் மொத்தம் 6 பக்கம். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் முன்பே நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை காட்டக்கூடிய நீதிமன்ற முத்திரை ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் எப்போது உயிலை செல்போனில் போட்டோ எடுத்தார் என்று கேட்டால் சுமார் 1 மாதத்திற்கு முன்பாக செல்போனில் போட்டோ எடுத்தார். உயில் எத்தனை ரூபாய் முத்திரைத்தாளில் எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பா எவ்வாறு கையெழுத்து செய்வார் என்பதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் மோசடியானது என்று சொல்லப்பட்டநிலையில் உயிலில் கையொப்பம் செய்த சாட்சிகளை நான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துள்ளோனா என்றால் நான் அவர்களை பார்த்தது இல்லை. அவர்களை அழைத்து வரவும் இல்லை. உயிலின் 6 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளை பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சுப்பையா நாடார் பெயரில் உள்ள அசல் பத்திரங்கள் காணாமல் போனதாக நான் குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் எனது அம்மாவின் கைவசம் இருந்து காணாமல் போனதாக அவர்சொன்னால் நான் ஆன்லைன் மூலமாக புகார் கொடுத்தேன். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான் பேருந்தில் செல்லும்போது எனது அப்பா பெயரில் உள்ள அசல் ஆவணங்கள் காணாமல் போனதாக என்னால் புகார் கொடுக்கப்பட்டதாக தான் புகாரிலும், ரசீதிலும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனது அம்மா சொல்லியும், காவல் ஆய்வாளர் சொல்லியும் தான் நான் அவ்வாறு புகார் கொடுத்தேன். போலிசார் சொன்னதன்பேரில் தினசரி நாளிதழில் ஆவணங்கள் காணாமல் போனதாக விளம்பரம் கொடுக்க

சொன்னதன்பேரில் நான் கொடுத்தேன். அந்த ஆவணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்று போலிசாரும் சான்று கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். காணாமல் போனதாக சொல்லப்படும் அசல் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் அய்யாத்துரையிடம் இருந்தபோது பார்த்துள்ளேன். அய்யாத்துரையின் இறப்பிற்கு பின்னர் எனது அம்மா வாங்கி வைத்திருந்தார். எனது அம்மா தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு ஆன பிறகு அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து வாங்கி செல்லும்போது எனது அம்மா ஆவணங்கள் காணாமல் போனதாக சொன்னார். எனது பையன் மகாராஜனுக்கு பத்திரம் எழுதிக்கொடுக்கும் சமயத்தில் ஆவணங்கள் ஏதாவது காணாமல் போனதா என்றால் காணாமல் போகவில்லை. மேற்படி ஆவணங்களை காண்பித்து தான் இந்தியன் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனது மகன் தான் அடமானம் வைத்துள்ளார். எனது மகன் 01.07.2020 ல் வாங்கிய கடன் தற்போதும் உள்ளதா என்றால் அது அடைக்கப்பட்டுவிட்டது. எப்போது அடைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.6 ல் அசல் உயில் ஆவணம் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது மகன் வங்கியில் இருந்து எப்போது அசல் உயிலை வாங்கிக்கொடுத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு ஞாபகமில்லை. எனது அப்பா உயில் 1987 ல் எழுதப்பட்டது, எனது அப்பா 1987 ல் இறந்துவிட்டார். பி.வா.சா.ஆ.10 ஆவணம் எனது அப்பா எனது பெயருக்கு எழுதிவைக்கவில்லை என்றும், அதை நான் மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.10 அசல் உயிலை போலிசார் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே ஆவணங்கள் காணாமல் போனதாக போலிசாரிடம் புகார் செய்தததுு போன்று பி.வா.சா.ஆ.11 ஆவணம் தயார் செய்யப்பட்டது போன்று மேற்படி உயிலையும் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 உயில் மோசடியானது என்றும், அது எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.16, பி.வா.சா.ஆ.17 ஆவணங்கள் மூலமாக சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது தாயார் மூலமாக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தீர்வை ரசீதுகள் தற்போதும் சுப்பையாநாடாரின் அனைத்து வாரிகளின் பெயர்களிலும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அதனால் நான்தான் எந்த தொழில் வரி ரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வில்லங்க சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தாவின் பெயர் அய்யாசாமி நாடார் ஆகும். பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் அருணாச்சலம் நாடார் மகன் சுப்பையா நாடார் என்று வந்திருப்பது தவறான ஆவணமாகும். எனது தாயாருக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் அசல் எங்குள்ளது என்றால் அதை ஞாபகப்படுத்தி தான் பார்க்கவேண்டும். செட்டில் மெண்ட் பத்திரத்திற்கான முத்திரைதாள் செலவு என்னால் தான் செலவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதவதற்கு யார் ஏற்பாடு செய்தார் என்றால் எனது தாயார் தான் ஏற்பாடு செய்தார். எனது மகன் மகாராஜனுக்கு செட்டில்மெண்ட்

எழுதிவைக்க யார் ஏற்பாடு செய்தார் என்றால் எனது மகன் தாக் ஏற்பாடு செய்தார். எனது அம்மா எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும், நான் எனது மகனுக்கு எழுதி வைத்த செட்டில் மெண்ட் பத்திரத்திலும் ஒரே சாட்சிகள் தான் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனது அம்மா எழுதி வைத்த பத்திரத்தில் செல்வமணி என்பவர் தான் சாட்சியாக கையெழுத்து போட வந்தார். வாதிகளுக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கு உள்ள நியாயமான பங்கை அபகரிக்கவேண்டும் என்பதற்காக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.17 வரையுள்ள ஆவணங்களை போலியாக உற்பத்தி செய்து கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

நான் வாதிகள் மீது அசல் ஆவணங்களை திருப்பித்தரவேண்டும் என்று முதலாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 35/2021 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகல் தான் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.1** மற்றும் **வா.சா.ஆ.2** ஆகும். மேற்படி வழக்கையையும் எனக்காக வழக்கறிஞர் திரு.பிரபாகர் தான் நடத்தினார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் வேறு வழக்கு நிலுவையில் இருந்ததால் அந்த வழக்கு முடிந்தபிறகு தரலாம் என்று தள்ளுபடி செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களில் உள்ள சொத்துவிவரங்கள் என்ன என்று தெரியுமா என்றால் அதை படிக்கும் நிலையில் நான் இல்லை. அந்த சொத்துவிவரங்களை பற்றி நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த சொத்துக்கள்

1999 ல் விற்பனை செய்ததாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது யார், யாருக்கு விற்பனை செய்தார்கள் என்றால் சங்கரம்மாளும், இராஜகோபாலும் சேர்ந்து சண்முகராஜா என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள். அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட சொத்திலும் எனக்கு பிரிவின்றி மூன்றில் ஒரு பங்கு உள்ளது என்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு உரிமை உள்ளது என்று சொன்னபிறகு பாகப்பிரிவினை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து விற்பனை செய்யப்பட்டபோது அனைவருக்கும் தெரியும் என்றும், அதனால் தான் அப்போது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 உயில் ஆவணத்தை என்னால் படித்து சொல்லமுடியுமா என்றால் தற்போது நான் படிக்கும் சூழ்நிலையில் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.10 உயில் எனது அப்பா எழுதவில்லை என்றும், அவர் இறந்தபிறகு என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாளது தேதிவரை சொத்துக்கள் அனைத்தும் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் எனக்கு கொடுத்த சொத்துக்களில் கூட்டு அனுபவம் இல்லை. எனது மகனுக்கு பெயரளவில் தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றும் தற்போதும் அந்த சொத்து கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.